[1968 மார்ச் 4

திரு. முனு ஆதி : சொக்கலிங்கபுரத்திலிருந்த முஸ்லீம்கள் தி.மு.க.வுக்கு ஆதரவாக இருந்தார்கள் என்ற காரணத்திற்காக முன்பிருந்த அரசாங்கம் பாலம் கட்டுவதைத் தள்ளிப் போட்டுக்கொண்டே வந்தது உண்மைதானா?

(திரு. கே. விநாயகம் எழுந்தார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கேள்வியில் குற்றச்சாட்டுகள் இருக்கின்றன. ஆகவே, இந்த வினாவை அனுமதிக்க முடியாது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்த வினா எண் 133. திரு வி. கே. கோதண்டராமன் கேட்ட வினாவிற்கு மாண்புமிகு விவசாய அமைச்சர் அவர்கள் பதில் கூறுவார்கள்.

மேச்சேரி இன ஆடுகள்

*133 வினா—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

மேச்சேரி ஆடுகளை அபிவிருத்தி செய்ய மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளின் விபரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : சபைமுன் விவர அறிக்கை [a] ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவர் அவர்களே, மேச்சேரி இன ஆடுகள் மிகவும் அதிகப்படியான இறைச்சியைக் கொடுக்குமென்பதால் அவற்றை அபிவிருத்தி செய்வதற்கு நீண்ட பெருமுயற்சிகள் எடுத்துக் கொள்ளபட்டுள்ளன என்று கூறியிருக்கிறீர்கள். அதே நேரத்தில் அதில் ஏராளமான நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கான காரணம் என்ன? ஆடுகள் அபிவிருத்தியடையவில்லையா? நஷ்டம் ஏற்பட்டதற்குக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இந்த வகை ஆடுகளைக் கவனமாகப் பாதுகாக்க வேண்டியிருக்கிறது. மேலும் இந்த ஆடுகளுக்கு அம்மைநோய், நச்சுசிக்கட்டு வியாதி வந்த காரணத்ினால் அவைகளைக் காப்பாற்ற முடியாமல் போய்விட்டது.

திரு. ந. தருமலிங்கம் : தலைவர் அவர்களே, வேறுவிதமான ஆடுகளை விட, மேச்சேரி இன ஆடுகளால் ஏற்படும் பொதுவான பயன் என்ன?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : விவர அறிக்கையில் முழு விவரங்களும் அடங்கியிருக்கின்றன. மேச்சேரி இன ஆடுகள் அதிக இறைச்சியைத் தருகின்றன.

திரு. ரா. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, நாங்குனேரி வட்டம், மூலக்கரைப்பட்டி ஆட்டுப்பண்ணையில் மேச்சேரி இன ஆடுகளை வைத்துப் பண்ணையை பராமரிக்க அரசாங்கம் முற்படுமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : மேச்சேரி இன ஆடுகள் இந்தப் பகுதியில் அதிகமாகக் காணப்படுகின்றன. சேலம் மாவட்டத்திலும், தென் ஆர்க்காடு மாவட்டத்திலும் உள்ள பண்ணைகளில் இந்த இன ஆடுகள் இருக்கின்றன. அங்கத்தினர் கூறுகிற பண்ணையில் இந்த இன ஆடுகள் வளர்க்க போதுமான சௌகரியம் இருக்குமானால் அதுபற்றி பரிசீலிக்கப் படும்.

THIRU B. VENKATASWAMY : Hon. Speaker, Sir, may I know from the Hon. Minister for Agriculture whether there is any proposal to introduce the Australian sheep in our State and if so, in which farms it is being introduced ?

---

a 77–80-ம் பக்கங்களில் முதலாம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

1968 மார்ச் 4]

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : மூலக் கேள்வி மேச்சேரி இன ஆடுகளைப் பொறுத்தது. கனம் உறுப்பினர் தனிக் கேள்வி போட்டால் விவரம் தரப்படும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவர் அவர்களே, இந்த இனப் பெருக்கத்தை மேலும் அபிவிருத்தி செய்வதற்காக வேண்டி, வயதடைந்த 50 பெண் ஆடுகளுக்கு ஒரு கடா என்ற வீதத்தில் போடப்பட்டுள்ளதாக ரிப்போர்ட்டில் கூறப்பட்டுள்ளது. 50 பெண் ஆடுகளுக்கு ஒரு கடா போதுமா? அதனால்தான் அபிவிருத்தி ஏற்படவில்லையென்பது காரணமா? (சிரிப்பு) இது அரசாங்கத்திற்குத் தெரியுமா? இது சம்பந்தமான விவரம் தேவை.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : 50 வயது அடைந்து அல்ல, 50 பெண் ஆடுகளுக்கு ஒரு கடா போதும் என்பதுதான். (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நண்பர் திரு. வி. கே. கோதண்டராமன் அவர்கள் ஒன்றைத் தெரிந்துகொள்ள வேண்டும். உறுப்பினர்கள் கேட்ட கேள்விக்கு அமைச்சர்கள் பதில் சொல்லாமல் இருக்கவும், கேள்விக்குச் சம்பந்தம் இல்லாத பதிலைச் சொல்லவும், விடையளிக்க விருப்பம் இல்லையென்று சொல்லவும், உரிமைபெற்றவர்களாக இருக்கிறார்கள். நீங்கள் கேட்கின்ற கேள்விகளையெல்லாம், அமைச்சர்கள் நன்றாகத் தெரிந்து கொண்டுதான் பதில் சொல்கிறார் என்று எடுத்துக் கொள்ள வேண்டும். கனம் அமைச்சர் அவர்கள் விரும்பினால் விளக்கம் கூறுவார்கள்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : வயது அடைந்த என்றால் பூப்படைந்த என்று அர்த்தம். (சிரிப்பு)

திரு. வி. கே. கோதண்டராமன் : பாயின்ட் ஆப் ஆர்டர் என்றால் அனுமதிக்கமாட்டீர்கள். நான் கேட்க விரும்புவது பாயின்ட் ஆப் க்ளாரிபிகேஷன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கொஞ்ச நேரம் கழித்து திரும்ப இன்னொரு வினா போடுவதற்குத் தங்களை அனுமதிக்கிறேன்.

ஹாஜி ம. மு. பீர் முகம்மது : பேரவைத் தலைவர் அவர்களே, நாங்குநேரி-மூலக்கரைப்பட்டியில் ஒரு ஆட்டுப் பண்ணை இருந்தது. ஆயிரம் ஆடுகளில் 400 ஆடுகள் இறந்துவிட்டன என்பதற்காக அந்த ஆட்டுப் பண்ணையையே மூடிவிட்டார்கள். அப்படி மாண்ட ஆடுகள் மேச்சேரி ஆடுகளா ? அதைத் திரும்பவும் திறக்கிற உத்தேசம் சர்க்காருக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : சரியான கண்காணிப்பு இல்லாததால் மூடிவிட்டு, அதை அபிஷேகப்பட்டிக்குக் கொண்டுபோய்விட்டார்கள்.

திரு. கே. சகாதேவ கவுண்டர் : ஆடுகள் விவசாயிகளுக்கு மிகவும் முக்கியம் வாய்ந்தவையாகும். ஆடுகள் உள்ள இடங்களில் அமோக விளைச்சல் கிட்டுகிற காரணத்தினால் ஆடுகள் வளர்க்கக் கட்டடங்கள் உள்ள இடங்களுக்கு எல்லாம் மேச்சேரி இன ஆடுகளை விஸ்தரிப்புச் செய்ய அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : ஏற்கனவே இருந்த அரசாங்கம் ஆடு வளர்ப்புத் திட்டத்தின்பேரில் கனம் உறுப்பினருடைய மாவட்டத்தில் தான் நிறையக் கட்டடங்கள் கட்டியிருக்கிறார்கள். ஆடு மேய்க்கும் பையனைக் கூட அமர்த்தி விட்டார்கள். ஆடுகள்தான் கொண்டுபோய் விடப்படவில்லை. கனம் அங்கத்தினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

திரு. அ. ஆறுமுகம் : ஒவ்வொரு ப்ளாக்கிற்கும் ஒரு ஆட்டுக்கடா என்று கொடுத்து வந்தார்கள். பெண் ஆடுகள் இல்லாத காரணத்தினால் இன விருத்தி ஏற்படாமல் இருக்கிறது. ஆகவே, ஆட்டுக்கடா கொடுக்கிறபோதே பெண் ஆட்டையும் கூடக் கொடுக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இன அபிவிருத்திக்காகத்தான் இப்போது கடாக்கள் கொடுக்கப்படுகின்றன.

திரு. தி. பொன்னுமலை : செயற்கை முறையில் கருத்தரிக்க மாடுகளுக்கு ஊசி போடுவதுபோல ஆடுகளுக்கும் ஊசி போட முயற்சிக்கப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : அது இன்னும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை.

திரு. கரு. சீமைச்சாமி : ஆண் ஆட்டைக் கடா என்று சொல்வது போல பெண் ஆட்டைப் பிருவை என்று சொல்வது. நிற்க ஆடுகளுக்கு அம்மை நோய் கண்டு ஏராளம் நஷ்டமாகிவிட்டது என்று சொல்லப்படுகிறதே, அம்மை வராதிருக்க தடுப்பு ஊசிகள் போடப்படவில்லையா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : வியாதிகளால் ஆடுகள் இறந்த பிறகுதான் அரசாங்கத்தின் கவனத்திற்கே கொண்டுவரப்பட்டது. உடனே டாக்டர்கள் சென்று மற்ற ஆடுகளும் பாதிக்கப்படாமல் இருக்க ஊசி போட்டார்கள். பொதுவாக நோய் வராதிருக்க ஊசிகள் போடப்படுகின்றன.

திரு. சோ. அழகர்சாமி : சரியான முறையில் கண்காணிக்கப்படாததால் மூலக்கரைப்பட்டி ஆட்டுப் பண்ணையை மூடிவிட்டதாகச் சொன்னார்கள். அதைச் சரியான முறையில் செயல்படுமாறு திறப்பதற்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : அதுபற்றி பரிசீலிக்கலாம்.

திரு. பி.ஜி. கருத்திருமன் : மேச்சேரி ஆடு செம்மறி ஆடுகளில் சிறந்த ஆடு என்பது பொதுவான அபிப்பிராயம். நோய் தாங்குகின்ற சக்தியுள்ள இனமாக அதை விருத்தி செய்ய ஒரு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்களா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : நோயே வராமல் தவிர்க்க முடியாது. நோய் வரும்போது மருந்து கொடுத்து நோயைத் தவிர்ப்பதற்கு வேண்டிய முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

திருமதி வி. ப. பழனியம்மாள் : சேலம், கிருஷ்ணகிரி போன்ற மாவட்டங்களில் இந்த ஆடுகளை வளர்ப்பதற்கு உதவி மானியம் கொடுத்து வந்திருப்பதாகத் தெரிகிறது. இந்த உதவியை கோவை மாவட்டத்திற்கும் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இந்தத் திட்டம் எல்லாப் பகுதிக்கும் பொருந்தும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது திரு வி. கே. கோதண்டராமன் அவர்கள் வினா கேட்பார்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன் : அந்தச் சூட்டோடு சூடு விட்டிருந்தால் நன்றாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சற்று சூடு ஆறிய பிறகு கேள்வி போடவேண்டும் என்பதற்காகத்தான் கொஞ்ச காலம் தாமதித்து இப்போது வினா கேட்க வாய்ப்புக் கொடுத்தேன்.

திரு. வி. கே. கோதண்டராமன் : இந்த இன ஆடுகள் அபிவிருத்திக்கு குளிர்ந்த பிரதேசமாக இருக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். ஆகவே, மலைப்பிரதேசமாகிய ஏலகிரி, ஜவ்வாதுமலை ஆகிய இந்தப் பிரதேசத்தில் இந்த இன ஆடுகளை அபிவிருத்தி செய்ய ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : அந்தப் பகுதிகளில் ஆடு மேய்ச்சலுக்கு வேண்டிய இடம் இருக்கிறதா ? ஆடுகளினால் காடு அழிந்துவிடுமோ என்கிற கருத்தும் தெரிவிக்கப்படுகிறது. இருப்பினும் எந்தப் பகுதியில் இப்படி ஆடுகளை வளர்க்கலாம் என்று உறுப்பினர் எழுதி அனுப்பினால் அது பரிசீலிக்கப்படும்.

திரு. செ. பாலசுப்பிரமணியம் : மேச்சேரி இன ஆடுகளை விருத்தி செய்ய கடாக்கள் மேச்சேரி பகுதியிலேயே வாங்கிக் கொடுக்கிறார்கள். அங்கே போதுமான கடாக்கள் கிடைப்பதில்லை. கோவை போன்ற இடங்களிலும் அந்தக் கடாக்கள் கிடைப்பதினால் அங்கிருந்து வாங்கி அளிக்க சர்க்கார் அனுமதிக்குமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கனம் அங்கத்தினர் குறிப்பிட்டது போல் கடாக்களுக்குப் பஞ்சம் இல்லை. சேலம் மாவட்ட பகுதியிலும், சின்னச்சேலம் பகுதியிலும் கிடைக்கின்றன.

திரு. ஜெ. பெள்ளி கௌடர் : நீலகிரி மாவட்டத்தில் ஆடு வளர்க்கும் திட்டம் நல்லமுறையில் செயல்படுகிறதா ? அதை விரிவாக்கும் திட்டம் ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : நீலகிரி மாவட்டத்தில் ஆடு வளர்க்கும் திட்டம் நல்லமுறையில் செயல்பட்டு வருகிறது. நானே நேரில் பார்த்து வந்து சொல்கிறேன். அங்கே மிக நேர்த்தியான முறையில் கண்காணிப்போடு வளர்க்கப்பட்டு வருகின்றன.

Award for inter-caste marriages

***134 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Harijan Welfare and Information be pleased to state the number of inter-caste marriages reported to the Government for the purpose of award of gold medal in July and August 1967 ?**

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அரசினர் கவனத்திற்கு ஒரு மனுவும் கொண்டு வரப்படவில்லை.

திரு. கே. விநாயகம் : அப்படி கலப்புத் திருமணம் செய்துகொண்டவர்கள் அரசாங்கத்திற்குத் தங்கப்பதக்கம் கொடுக்க வேண்டுமென்று மனுப் போட வேண்டுமா ? அல்லது அரசாங்கத்தில் இருக்கக்கூடிய நிர்வாக இயந்திரத்தைக் கொண்டே யார் யார் கலப்புத் திருமணம் செய்து கொண்டிருக்கிறார்கள் என்று பார்த்து தங்கப் பதக்கம் கொடுக்க முயற்சி எடுக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: கலப்புத் திருமணம் செய்துகொண்டவர்களுக்குத் தங்கப்பதக்கம் வழங்கப்படும் என்று அரசாங்கம் விளம்பரம் செய்திருக்கிறது. ஆகவே, தங்கப்பதக்கத்தைப் பெறுவதற்கு கலப்புத் திருமணம் செய்துகொண்டவர்களே விண்ணப்பம் போடவேண்டும்.

திரு. ஈ. ஆர். கிருஷ்ணன் : பதிவு செய்துகொண்ட கலப்புத் திருமணங்களுக்குக்குத்தான் தங்கப்பதக்கம் வழங்கப்படுகிறதா ? பதிவு செய்துகொள்ளாமல் தலைவர்கள் தலைமையில் நடைபெறுகிற கலப்புத் திருமணம் செய்துகொண்டவர்களுக்கும் பதக்கம் வழங்கப்படுமா ? அவர்களுக்கு உத்தியோகச் சலுகை, இலவசப்படிப்பு ஆகியவை உடனடியாக அளிக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: இது கலப்புத் திருமணம் செய்து கொள்பவர்களுக்குத் தங்கப்பதக்கம் வழங்கப்படுகிற கேள்வி. உத்தியோகச் சலுகையோ, படிப்புச் சலுகையோ கொடுக்கிற கேள்வி அல்ல. கலப்புத் திருமணம் செய்துகொள்பவர்கள் சுயமரியாதைத் திருமணம் செய்து கொண்டாலும் இந்தப் பதக்கம் பெற உரிமையுள்ளவர்களாவார்கள்.

DR. H. V. HANDE : Will the Hon. Minister give any reward for those who have had intercaste marriage earlier, that is, give the award with retrospective effect ?